**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM I

C 8064888

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு கிருஷ்ணகிரி Year ஆண்டு : 2020 FIR No முத.அ. எண் : 10/AC/2020 Date நாள் : 21-11-2020

2. (i) Act சட்டம் : The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள் : 7,

(ii) Act சட்டம் : Sections பிரிவுகள் : 7 r/w 12

(iii) Act சட்டம் : Sections பிரிவுகள் :

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : Date to நாள் வரை : 20.11.2020 Prior to 7.45 PM

Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :

(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : Time நேரம் : 20.11.2020 at 11.45 PM

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Time நேரம் :

4. Type of Information : Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Suo-Motu

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : ஓசூர் சார்பதிவாளர் அலுவலகம், சுமார் 52 கி.மீ மேற்கு

Beat Number முறைக் காவல் எண் : (b) Address முகவரி :

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : G. V. கிருஷ்ணராஜன் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : தி. வேட்ராயன்

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 48/2020 (d) Nationality நாட்டினம் : (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :

Date of Issue வழங்கப்பட்ட நாள் : Place of Issue வழங்கப்பட்ட இடம் :

(f) Occupation தொழில் : காவல் துறை கண்காணிப்பாளர் (g) Address முகவரி : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) கு.N. வேலு (39), த/பெ நாகராஜன், உதவியாளர், (பொறுப்பு) இணை சார்பதிவாளர், ஓசூர் சார்பதிவாளர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம்

2) தி. C. பாண்டிச்செல்வம் (30), த/பெ செல்லகிருஷ்ணன், உதவியாளர், சூளகிரி சார்பதிவாளர் அலுவலகம், (பொறுப்பு) சார்பதிவாளர், ஓசூர் சார்பதிவாளர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம்

3) தி. M. ரமேஷ் (45), த/பெ முருகேசு, 95/1, கணேசா காலனி, தொட்டமெட்டரை அஞ்சல், தேன்கனிக்கோட்டை தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / informant

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : தாமதம் இல்லை.

GCP 240-34(Type-2) 90,000 Cps 21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO-MOTU

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பும் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 21/11/20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 21/11/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.11.2020/10.00 Hrs

Name: பெயர் G.V. KIRUSHNAA RAAJAN
Rank: நிலை Deputy Supdt. of Police, VAC, Krishnagiri. No. எண்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண் 10/AC/2020 u/s 7, 7 r/w 12 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் 12 ன் இணைப்பு.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு செய்வதற்காக வரும் வாடிக்கையாளர்களிடமிருந்தும், இடைத்தரகர்களிடமிருந்தும் கையூட்டு பெறுவதாக மாலை சுமார் 6.00 மணிக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யும் பொருட்டு மாலை சுமார் 6.30 மணியளவில் அரசு சாட்சிகளான கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரகத்தில் க்யூ பிரிவு தலைமை உதவியாளராக பணிபுரியும் திரு.வெ.ஜெயராமன் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், பையனப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் திரு.எஸ்.தங்கராஜ் ஆகியோர் நிலையம் ஆஜராகினர். நான் மற்றும் அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவுடன் அரசு வாகனம் TN 22 G 7777 என்ற நான்கு சக்கர வாகனத்தில் மாலை சுமார் 6.45 மணிக்கு ஓசூர் புறப்பட்டு சென்று ஓசூர் சார்பதிவாளர் அலுவலக நுழைவு வாயில் அருகில் மாலை சுமார் 7.45 மணிக்கு சென்றடைந்தோம். அப்போது சார்பதிவாளர் அலுவலகம் பூட்டப்பட்டு, அலுவலக நுழைவு வாயிலின் அருகே ஒரு நபர் அவருடைய கையில் கருப்பு நிற பையை தனது தோளில் மாட்டிக்கொண்டு அங்கிருந்து செல்ல முற்பட்டவரை நிறுத்தி விசாரிக்க அவர் தனது பெயர் ரமேஷ் என்றும், தான் ஓசூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் பத்திர எழுத்தர் பணிசெய்துவரும் திரு.ஹரீஸ்குமார் என்பவரிடம் உதவியாளராக பணிபுரிந்துவருவதாகவும், இன்று மாலை இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி அவர்கள் தன்னிடம் பணத்துடன் கூடிய கருப்பு நிற பையை தன்னிடம் கொடுத்துவிட்டு, கொஞ்சநேரம் கழித்து வாங்கிகொள்வதாக சொன்னதாக என்னிடம் தெரிவித்தார். பிறகு அவர், சார்பதிவாளர் திரு.பன்னீர்செல்வம் அவர்களுடன் TN 24 AM 3929 என்ற பதிவு எண் கொண்ட சிகப்பு நிற டாட்டா டியாகோ வாகனத்தில் புறப்பட்டு சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். மேற்படி நபர் கூறிய விவரத்தினை பரிசீலனை செய்யும் பொருட்டு திரு.எம்.ரமேஷ் செல்போன் எண் 6374375244 என்ற எண்ணிலிருந்து திரு.என்.நேருஜி அவர்களின் 9042578750 என்ற எண்ணிற்கு மாலை 7.55 மணிக்கு போன்செய்து பணம் தன்னிடம் உள்ளது என்று கூறினார். அதற்கு இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி அவர்கள் கிருஷ்ணகிரிக்கு சென்றுகொண்டிருப்பதாகவும், அந்த பணத்தை நாளை வந்து வாங்கிகொள்வதாகவும் கூறினார். அவர்கள் பேசிய உரையாடலை நான் மற்றும் அரசு சாட்சிகளும் கவனித்தோம். பிறகு நான் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பிலிருந்த காவலர் 40743 திரு.ஜி.சந்திரசேகரன் என்பவரிடம் TN 24 AM 3929 என்ற பதிவு எண் கொண்ட சிகப்பு நிற டாட்டா டியாகோ என்ற வகானம் ஓசூரிலிருந்து கிருஷ்ணகிரி நோக்கி வருவதாகவும் கிருஷ்ணகிரி டோல் கேட்டில் அந்த வாகனத்தை நிறுத்திவைக்குமாறும் அறிவுறுத்தினேன். பிறகு நான், அரசு சாட்சிகள் மற்றும் காவலர்களுடன் விசாரணையின் நிமித்தம் திரு.எம்.ரமேஷ் அவர்களை அழைத்துக்கொண்டு அரசு வாகனத்தில் இரவு 8.00 மணியளவில் ஓசூரிலிருந்து புறப்பட்டு கிருஷ்ணகிரி டோல்கேட்டிற்கு இரவு 9.00 மணியளவில் வந்தடைந்தோம். அங்கு ஏற்கனவே அறிவுறுத்தியதன் பேரில் காவலர் திரு.ஜி.சந்திரசேகரன் அவர்களால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மேற்படி வாகனத்தை நான் அரசு சாட்சிகளுடன் சென்று பார்த்ததில், மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் இருக்கையில் ஆசிப் என்பவரும், அவருக்கு அருகில் இடதுபக்க முன் இருக்கையில் இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி அவர்களும், பின் இருக்கையில் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம் நான் என்னையும் என்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்துகொண்டு, திடீர் தணிக்கைக்கு வந்த விபரத்தை விளக்கமாக எடுத்துச்சொல்லி, பிறகு ஓசூரிலிருந்து அழைத்துவரப்பட்ட திரு.எம்.ரமேஷ் அவர்களிடமிருந்த பையின் முன்பகுதியில் பிரவுன் நிறத்தில் சாய்வாக கோடு போட்ட பகுதியில் ஆரஞ்சு நிறத்தில் AMERICAN TOURISTER என்று எழுதப்பட்ட கருப்புநிற பையில் உட்புறத்தில் ஆரஞ்சு நிற துணி வைத்து தைக்கப்பட்ட அந்த பையை அரசு சாட்சிகளின் உதவியுடன் திறந்து பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.3,58,400/- இருந்தது. அந்த பணம் குறித்து நான் அரசு சாட்சிகள் மற்றும் இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி ஆகியோர்களின் முன்னிலையில் திரு.எம்.ரமேஷ் என்பவரிடம் கேட்க, இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி அவர்கள் தன்னிடம் இன்று மாலை கொடுத்துவைத்த பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணத்தை பற்றி திரு.என்.நேருஜி அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் 20.11.2020 ஆம் தேதி சுமார் 62 பத்திரங்கள் பதிவு செய்ததற்காக பதிவுதாரர்கள் மற்றும் பத்திர எழுத்தர்கள் தனக்கு தனியாக கொடுத்த பணத்தை திரு.ரமேஷ் என்பவரிடம் கொடுத்துவைத்திருந்ததாகவும் பிறகு வாங்கிகொள்வதாக கூறியதாகவும் தெரிவித்தார். பொது ஊழியரான அவர் பொது கடமையை முறையற்ற வகையிலோ அல்லது நேர்மையற்ற முறையிலோ செய்வதற்காக கையூட்டாக பெற்றிருக்ககூடும் என நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் அந்தப் பணம் என்னால்

அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின்போது பணம் வைத்திருந்த பையுடன் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு, திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களை விசாரிக்க அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து மொத்தம் ரூ.28,500/-ஐ அடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை பற்றி விளக்கம் கேட்க, முதலில் அவர் முன்னுக்கு பின் முரணாக தெரிவித்து பிறகு தன்னால் இன்று சுமார் 40 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு பதிவுதாரர்கள் மற்றும் பத்திர எழுத்தர்கள் தனியாக தனக்கு கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். பொது ஊழியரான அவர் பொது கடமையை முறையற்ற வகையிலோ அல்லது நேர்மையற்ற முறையிலோ செய்வதற்காக கையூட்டாக பெற்றிருக்ககூடும் என நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் அந்தப் பணம் என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின்போது மகஜரில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக இன்று இரவு 9.45 மணி முதல் இரவு 11.45 மணி வரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதில் அரசு சாட்சிகள் கையொப்பம் செய்தனர். அந்த நகல் ஒன்றை எதிரிகள் மூவருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது 1. திரு.என்.நேருஜி (39), த/பெ நாகராஜன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஓசூர், பொறுப்பு இணை சார்பதிவாளர், ஓசூர், 2. திரு.சி.பன்னீர்செல்வம் (30) த/பெ சென்னகிருஷ்ணன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம் சூளகிரி, பொறுப்பு சார்பதிவாளர், ஓசூர் மற்றும் தனிநபர் திரு.எம்.ரமேஷ் (25) த/பெ முருகேஷ், 95/1 கணேஷ்காலனி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்களிடம் அரசு சாட்சிகள் தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவுசெய்தார்கள். பொறுப்பு இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி மற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திரு.சி.பன்னீர்செல்வம் ஆகியோர்கள் வைத்திருந்த பணமானது அவர்கள் தங்களது பொது கடமையை செய்ததற்காக பத்திரபதிவுதாரர்கள் மற்றும் பத்திரஎழுத்தர்கள் ஆகியோர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்பதால் அவர்கள் 1988ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச்சட்டம்(2018ம் ஆண்டு திருத்தப்பட்டது) பிரிவு 7ன் படி குற்றம் புரிந்துள்ளார்கள். மேலும், தனிநபர் திரு.எம்.ரமேஷ் என்பவர், இணை சார்பதிவாளர் திரு.என்.நேருஜி என்பவர் பொது கடமையை முறையற்ற வகையிலும் நேர்மையற்ற முறையிலும் செய்ததற்காக கையூட்டு பெற்று தன் வசம் அவர் கொடுத்து வைத்திருந்ததை பின்னிட்டு அவருக்கு கொடுப்பதற்காக குற்ற உள்நோக்குடன் உதவியாக இருந்துள்ளார் என்பதால் மேற்படி திரு.எம்.ரமேஷ் என்பவர் 1988ஆம்

ஆண்டின் ஊழல் தடுப்புச்சட்டம்(2018ம் ஆண்டு திருத்தப்பட்டது) பிரிவு 7 r/w 12 ன் படி குற்றம் புரிந்துள்ளார். எனவே, இன்று 21.11.2020 ஆம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 10/AC/2020 u/s 7 and 7 r/w 12 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன்படி வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.3,86,900/- ஆகியவற்றை கிருஷ்ணகிரி சிறப்பு நீதிபதி/தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

21/11/20

Dy. Supdt. of Police

Krishnagiri V & AC.